25.07.2017

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயிகள் சிந்தனையில் புதிய பாதை**

ஆர்.கே.பேட்டை:சாலையை கரைக்கும் ஓடையால், வயல்வெளிக்கு செல்ல அவதிப்பட்டு வந்த விவசாயிகள், சுய முயற்சியால், ஓடையின் நீரோட்டத்தை மாற்றி அமைக்க, பாறையை உடைத்து, புதிய பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டுஉள்ளனர்.

ஆர்.கே.பேட்டை ஒன்றியம், கதனநகரம் ஊராட்சிக்கு உட்பட்டது எஸ்.கே.வி.கண்டிகை கிராமம், விவசாயம், இங்குள்ளவர்களின் பிரதான தொழில், கிராமத்தின் மேற்கில், மலையடிவாரத்தை ஒட்டியுள்ள வயல்வெளிக்கு செல்ல, ஏரிக்கரை மதகை ஒட்டி, சாலை வசதி உள்ளது. மதகு வழியாக வெளியேறும் உபரிநீர், ஓடையில் பாய்ந்து செல்கிறது.

ஓடையின் குறுக்கே பெரிய குன்று உள்ளதால், நீரோட்டத்தின் திசை மாறி, விவசாயிகள் நடந்து செல்லும் பாதையில் மண்ணரிப்பு ஏற்பட்டு வருகிறது. இதனால், பாதை சிதைந்து, கரைந்து வருகிறது. மழைக்காலத்தில், விவசாயிகள் வயல்வெளிக்கு செல்ல முடியாத நிலை உள்ளது.

பாதையை சீரமைக்க ஒன்றிய நிர்வாகம் எந்தவித முயற்சியும் எடுக்காத நிலையில், ஓடையின் குறுக்கே உள்ள குன்று உடைக்கப்பட்டு, அதன் சிதறல்களை, கரையை ஒட்டி கொட்டும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர்.

குன்று உடைக்கப்படுவதால், நீரோட்டத்திற்கு புதிய பாதை உருவாகும், உடைக்கப்பட்ட குன்றின் சிதறல்களை கரையை ஒட்டி கொட்டுவதால், மண்ணரிப்பால், பாதை கரைவது தடுக்கப்படும்.

விவசாயகளின் சுய சிந்தனையில் உதித்த இந்த கருத்து செயல் வடிவம் பெற்று வருவதால், இந்த மழைக்காலத்தில், வயல்வெளிக்கு செல்ல சீரான பாதை கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுஉள்ளது.

**டி காய்கறி தோட்டம் அமைக்க...அழைப்பு!மானிய விலையில் விதை வழங்கல்**

திருவள்ளூர் மாவட்டத்தில், மாடி காய்கறி தோட்டம் அமைக்க, மானியம் விலையில் விதை வழங்க, தோட்டக்கலை துறை முடிவு செய்து, விவசாயிகளை வரவேற்றுள்ளது.

காய்கறிகளை சிறந்த முறையில் வீட்டின் மேல் தளத்தில் வளர்ப்பதற்காகவே, மாடி காய்கறி தோட்டம் என்ற திட்டத்தை வேளாண் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, இந்த மாடி தோட்டம் அமைக்க, மானிய விலையில் விதைகள் வழங்கப்படுகின்றன.இதில், நஞ்சு இல்லாத புத்தம் புதிய இயற்கை காய்கறிகளை, நமக்கு நாமே திட்டத்தின் கீழ், வீட்டின் மாடியில் உற்பத்தி செய்யும் வகையில், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.இதில், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள, 14 ஒன்றியங்களுக்கு, 6,000 எண்ணிக்கையில், மாடியில் பயிரிடப்பட வேண்டிய இடு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில், ஒருவருக்கு, அதிகபட்சமாக, ஐந்து தளைகள் அடங்கிய இடுபொருட்கள் வழங்கப்படும். ஒரு தளையின் முழு விலை, 522 ரூபாய் ஆகும், ஆனால், மானிய விலையில், 200 ரூபாய் தள்ளுபடி போக, 323 ரூபாய் வசூலிக்கப்பட்டு தளை வழங்கப்படுகிறது.இந்த தளையை பெற, சம்பந்தப்பட்ட நபர்கள், ஆதார், குடும்ப அட்டை, வாகன ஓட்டுனர் உரிமம், வங்கி கணக்கு புத்தக நகல் என, இவற்றில் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். வாடகை வீட்டில் குடியிருப்போர், வாடகை தொடர்பான சான்றிதழ் அளிக்க வேண்டும்.

அதன் பின், தகுதியானவர்களிடம், வெண்டை, கத்தரி, மிளகாய், தக்காளி, அவரை, அரைக்கீரை, முள்ளங்கி, பாகற்காய், கொத்தவரை, கொத்தமல்லி போன்ற, 10 வகை காய்கறி விதைகள், உயிர் உரங்கள் இரண்டு, உயிர் மஞ்சாணக்கொல்லி மருந்துகள் இரண்டு, நீரில் கரையும் உரம் ஒரு கிலோ,

பாலித்தீன் பைகள் தேங்காய் நாருடன் ஆறு, வேம்பு எண்ணெய் 100 மி,லி. மற்றும் சாகுபடிகுறித்த கையேடு வழங்கப்படும்.

இதை பயன்படுத்தி, பகுதிவாசிகள் தங்கள் வீடுகளில் மாடி தோட்டம் அமைத்து பயன் பெற வேண்டும். மேலும், தகவலுக்கு, 94442 21095 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விபரங்கள் தெரிந்து கொள்ளலாம் என, தோட்டக்கலை அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**ரசாயனம் கலக்காத இயற்கை பேரிச்சம் பழம் விற்பனை ஜோர்**

ரசாயனம் கலக்காத இயற்கை பேரிச்சம் பழம், திருத்தணி நகரத்தில் அதிகளவில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு நாளைக்கு, குறைந்தபட்சம், 150 கிலோவும், ஒரு கிலோ, 200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.இரும்பு சத்து, நரம்பு தளர்ச்சி மற்றும் ரத்த ஓட்டம் சீர்படுத்தல் உள்பட பல்வேறு நோய்களை பேரிச்சம்பழம் குணப்படுத்துகிறது.

இயற்கை பேரிச்சம்பழம், தற்போது திருத்தணி நகரம் மற்றும் முருகன் மலைக்கோவிலில் அதிகளவில் விற்கப்படுகிறது. வாடிக்கையாளர்கள் இயற்கை பேரிச்சம்பழம் ரசாயனம் கலக்காததால், விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.இது குறித்து, திருத்தணி நகர பழ வியாபாரி ஆர். வெங்கடேசன் கூறியதாவது:திருத்தணி நகரில், 30க்கும் மேற்பட்ட பழக்கடைகளில் இயற்கை பேரிச்சம்பழம் விற்பனை செய்யப்படுகிறது. மூன்று ஆண்டுகளாக இப்பழம் திருத்தணியில்
விற்கப்படுகிறது. போதிய அளவில் நகரவாசிகள் இடையே இயற்கை பேரிச்சம்பழம் குறித்து விழிப்புணர்வு இல்லாமல் இருந்தது. தற்போது, ஆறு மாதமாக இந்த பேரிச்சம்பழத்தை அதிகளவில் வாடிக்கையாளர்கள் வாங்கிச் செல்கின்றனர்.

தற்போது, ஒரு நாளைக்கு குறைந்தபட்சம், 150 கிலோ விற்பனை ஆகிறது. எனது கடையில், மட்டும் ஒரு நாளைக்கு, 15 - 20 கிலோ விற்பனையாகிறது. சென்னை கோயம்பேட்டில் இருந்து, ஒரு கிலோ, 160 ரூபாய்க்கு வாங்கி வந்து, 200 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம்.

முக்கிய விழாக்களின் போது, ஒரு கிலோ, 220 ரூபாய்க்கு விற்பனை செய்கிறேன். ரசாயனம் இல்லாமல், இயற்கையாக மரத்தில் கொண்டு வந்து விற்கப்படுவதால், மக்களிடையே அதிகளவில் இந்த பேரிச்சம்பழம் விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், வரும், 28 ல் நடக்கிறது என, கலெக்டர் கதிரவன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், வரும், 28 ல், கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது. கூட்டத்தில், கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்று, தங்கள் குறைகளை தெரிவித்து நிவர்த்தி பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**கால்நடைகளுக்கான சிறப்பு முகாம்**

மசினகுடி, மாயாரில் கோவை அருளகம் அறக் கட்டளை சார்பில், கால்நடைகளுக்கு நோய் வராமல் காப்பது குறித்து சிறப்பு முகாம் நடந்தது.
ஓய்வு பெற்ற அரசு கால்நடை டாக்டர் கணேசன் பேசுகையில், "கறவை மாடுகளுக்கு, 'மடிவீக்கம்' நோய் ஏற்படுவதை தடுக்க, பால் கறந்த
உடன், அவைகளை படுக்க விடாமல், தீவனம் போட வேண்டும்; கட்டுத்துரையை சுத்தமாக வைக்கவேண்டும்.
வறட்சி காலங்களில் ஏற்படும் சிரமத்தைத் தவிர்ப்பதற்காக, வீடுகள்
அருகே சிறிய அளவிலாவது பசுந்தீவனம் வளர்ப்பது அவசியம். அரிசியை மாட்டுக்கு போடுவதைத் தவிர்க்க வேண்டும்," என்றார்.
அருளக அமைப்பின் செயலாளர் பாரதிதாசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**வத்தலக்குண்டு 'சுனாமி சுரைக்காய்' ஒட்டன்சத்திரத்தில் விற்பனை**

வத்தலக்குண்டில் விளையும் 'சுனாமி' சுரைக்காய், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது.ஒட்டன்சத்திரம் காய்கறி

மார்க்கெட்டுக்கு உள்ளூர் காய்கறி வரத்து இல்லை என்ற போதிலும், வெளியிடங்களில் விளைவிக்கப்பட்ட காய்கறிகள் இங்கு சரக்கு வாகனங்கள் மூலம் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.

வத்தலக்குண்டு, அதனை சுற்றியுள்ள பகுதிகளில் 'சுனாமி' சுரைக்காய் பயிரிடப்பட்டு தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. இவை மினிலாரிகள் மூலம் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு தினமும் கொண்டு வரப்படுகிறது. இவற்றை கேரள வியாபாரிகள் அதிகமாக வாங்கிச் செல்கின்றனர். சாதாரண சுரைக்காயை விட, இதன் தோல் சற்று கடினமானதாக இருக்கும். தயிர் வெங்காயம் மற்றும் சாம்பார் வைக்க அதிகமாக பயன்படுகிறது. பல மாதங்களாக கிலோ ரூ.10 க்கும் குறைவாக விற்று வந்தது. நேற்று ஒரு கிலோ 'சுனாமி' சுரைக்காய் ரூ.13 க்கு விற்றது. 'வரத்து தொடர்ந்து அதிகரிக்கும் நிலையில் விலையில் மாற்றம் வரும்' என, வியாபாரிகள் தெரிவித்தனர்.

**வறட்சியால் காய்ந்த தென்னைகள் :வருவாய்த் துறை கணக்கெடுப்பு**

வறட்யசியால் காய்ந்து போன தென்னை மரங்கள் குறித்த கணக்கெடுப்பு பணி மூன்று நாட்களாக நடந்து வருகிறது.வேடசந்துார் தாலுகா பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால், ஏராளமான தென்னை மரங்கள் காய்ந்து வருகின்றன. விவசாய கிணறு,போர்வெல்களில் தண்ணீரே இல்லாததால் மக்கள் ஆடு மாடுகளை கூட பராமரிக்கு முடியாமல் தவிக்கின்றனர். இது குறித்த செய்தி தினமலர் நாளிதழில் படத்துடன் வெளியானது.

இதை தொடர்ந்து தாலுகா வாரியாக உள்ள 54 வருவாய் கிராமங்களிலும், அந்தந்த பகுதி வி.ஏ.ஒ., க்கள், உதவியாளர்கள் மூலம் காய்ந்து போன தென்னை மரங்கள் குறித்த கணக்கொடுப்பு பணிகள் நடந்து வருகின்றன. காய்ந்துபோன மரங்கள் எத்தனை, அவை எத்தனை ஆண்டுகள் பழமையானது, புதிதாக நட்ட தென்னங்கன்றுகளா என்ற கோணத்தில் விசாரணை நடந்து வருகிறது. ஏற்கனவே கணக்கெடுத்ததற்கு இன்னும் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. தற்போது மீண்டும் விடுபட்ட காய்ந்து போன

மரங்கள் குறித்த கணக்கெடுப்பு பணி நடந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தாசில்தார் தசாவதாரனிடம் கேட்டபோது; ஏற்கனவே காய்ந்து போன தென்னைகள் குறித்த கணக்கெடுப்பு பணி நடந்துள்ளது. மேலும் காய்ந்து போன,விடுபட்ட மரங்கள் குறித்த கணக்கெடுக்கப்படுகிறது. விரைவில் நஷ்ட ஈடு வழங்கப்படும், என்றார்.

**மண் பரிசோதனை செய்வது எப்படி: தோட்டக்கலை அலுவலகம் விளக்கம்**

மண் பரிசோதனை மூலம் விவசாயம் செய்தால் அதிக மகசூல் பெறலாம். இதற்கு முன் பரிசோதனைக்காக மண்ணை எவ்வாறு சேகரிப்பது என, தோடக்கலை துறை அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர். தோட்டக் கலைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: மண் பரிசோதனை மட்டுமின்றி, தண்ணீர் பரிசோதனையும் அவசியமாகும். மண் பரிசோதனை செய்வதற்கு எப்படி மண் சேகரிக்க வேண்டும் என்பது முக்கியமாகும். மண்ணை தொடர்ந்து பயன்படுத்தி அதில் உள்ள பயன்களை அனுபவிக்க வேண்டும் என்றால், மண்ணை ஆய்வக பரிசோதனைக்கு உட்படுத்தி, பரிசோதனை முடிவுகளுக்கு ஏற்றவாறு விவசாயிகள் சாகுபடி செய்ய வேண்டும்.

சாகுபடி செய்வதற்கு முன்னர் நாம் சாகுபடி செய்யும் நிலத்தின் மண்ணில் உள்ள சத்துக்கள், குறைபாடு உள்ள சத்துக்கள் எவை என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். ரசாயன உரங்கள், குப்பை, பூச்சிக்கொல்லி மருந்துகள் இடப்பட்ட இடங்களில் மண் மாதிரிகள் எடுக்க கூடாது.

மேலும் வரப்பு, கிணறு பகுதி, நீர்வடியும் பகுதி மற்றும் நிரந்தரமாக நிழல்படும் இடங்களிலும் மண் மாதிரிகள் எடுக்க கூடாது. நிலம் தரிசாக இருக்கும் காலத்தில் மண் மாதிரி எடுக்கலாம். 'வி' வடிவத்தில் வெட்டி உட்புற மண்ணை எடுக்காமல் இருபக்கமும் சுரண்டி எடுக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 4 முதல் 7 இடங்களில் மண் மாதிரி எடுக்கலாம்.

சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை நிழலில் உலர்த்தி அரை கிலோ மண்ணை ஆய்வகத்திற்கு கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கும் பட்சத்தில் மாவட்ட மண் பரிசோதனை மையத்தில் மண் பரிசோதனை செய்யப்பட்டு, உங்களின் நிலத்தின் தன்மை குறித்த விரிவான தகவல்களை அளிப்பர். அதற்கு ஏற்றவாறு சாகுபடி முறை, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்தலாம். இதனால் கூடுதல் மகசூல், நோய் தாக்காமல் இருக்கும், என்றார்.

**அவரை செடியில் புழுக்கள் தாக்குதல்**

போடி பகுதியில் அவரை விளைச்சல் அதிகரித்துபோதும், மகசூல் நேரத்தில் புழுக்கள் தாக்கம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். கடந்தாண்டை விட, கிலோவுக்கு ரூ. 10 அதிகரித்துள்ளது.மாவட்டத்தில் போடி, காமராஜபுரம், நாகலாபுரம், சிலமலை, ராசிங்காபுரம், மணியம்பட்டி, உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் அவரை சாகுபடி நடக்கிறது. ஜூன், ஜூலை, ஆக., மாதங்கள் இச்சாகுபடி அதிகமாக காணப்படும். மற்ற மாதங்களில் ஒரு சில விவசாயிகள் மட்டும் பயிரிடுவர். அவரை சாகுபடியை பொறுத்தவரை நடவு செய்த 55 முதல் 60 நாட்களில் பலன் கிடைக்கும். கடந்த ஆண்டு அவரை விளைச்சல் அதிகரிப்பால் கிலோ ரூ.15 முதல் 20 வரை விலை சரிவு ஏற்பட்டது. விலை கட்டுபடியாகாததால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.

இதனால் பல விவசாயிகள் அவரை சாகுபடியில் ஆர்வம் காட்டவில்லை.

விலை அதிகரிப்பு: இந்நிலையில் காமராஜபுரம், நாகலாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் அவரை சாகுபடியில் பெரும்பாலான விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். தற்போது விளைச்சல் மட்டுமின்றி, விலையும் அதிகரித்துள்ளது. விவசாயிகளிடம், வியாபாரிகள் கிலோ 30 முதல் 35 ரூபாய்க்கு விலைக்கு வாங்குகின்றனர். இது கடந்தாண்டை விட 20 ரூபாய் கூடுதலாகும். சில்லரையில் கிலோ ரூ.40 முதல் 50 க்கு வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர்.

தற்போது வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் அவரையில் புழுக்கள் தாக்கமும், பழுப்பு நிறத்திலும் காணப்படுகிறது. புழுக்கள் தாக்கிய அவரை காய்களை தரம் பிரிப்பதில் விவசாயிகள் பெரிதும் சிரமம் அடைந்து வருகின்றனர். புழுக்கள் தாக்கத்தை கட்டுப்படுத்த விவசாய அதிகாரிகள் எவ்வித ஆலோசனையும் வழங்கவில்லை என, விவசாயிகள் புலம்புகின்றனர்.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில்," அவரையை பொறுத்தவரை கடந்த ஆண்டை விட, இந்தாண்டு விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால் விலை அதிகரித்துள்ளது. வெயில் காரணமாக அவரையில் புழுக்கள் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் மகசூல் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. புழுக்களை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரிகள் தகுந்த ஆலோசனை வழங்க முன்வரவேண்டும்" என்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விலை உயர்வு



ஆடி மாதத்தை முன்னிட்டு கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விலை உயர்ந்து இருக்கிறது.
சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த ஓரிரு மாதங்களாக காய்கறிகள் விலை குறைந்து வந்தது. விளைச்சல் அதிகரித்ததால் காய்கறிகள் விலை குறைய தொடங்கியது.

இந்தநிலையில் ஆடி மாதத்தை முன்னிட்டு காய்கறிகள் விலை ஓரளவு உயர்ந்து இருக்கிறது. ஒரு சில காய்கறிகள் தவிர ஏனைய அனைத்து காய்கறிகளின் விலையும் உயர்ந்து உள்ளது.
இதுகுறித்து சென்னை கோயம்பேடு காய்கறி சங்கத்தின் பொதுச்செயலாளர் அப்துல் காதர் கூறியதாவது:-

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தினமும் 250 முதல் 300 லாரிகள் மூலம் காய்கறிகள் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

இம்மாதம் ஆடி மாதம் என்பதால் பெரும்பாலான வீடுகளில் சைவ உணவுகளே தயாரிக்கப்படும். எனவே காய்கறிகள் தேவை அதிகமாக உள்ள இந்த சூழ்நிலையில் வரத்து குறைவு காரணமாக, காய்கறிகள் விலை உயர்ந்து இருக்கிறது. குறிப்பாக முருங்கைக்காய், பீட்ரூட், கத்தரிக்காய், கேரட், சாம்பார் வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகள் விலை கிலோவுக்கு ரூ.15 வரை உயர்ந்திருக்கின்றன. தக்காளி விலை ரூ.20 வரை குறைந்திருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:-
பல்லாரி- ரூ.10 முதல் ரூ.15 வரை, உருளைக்கிழங்கு- ரூ.15 முதல் ரூ.20, கேரட்- ரூ.50 முதல் ரூ.55 வரை, பீன்ஸ்- ரூ.40 முதல் ரூ.80 வரை, நூக்கல்- ரூ.30 முதல் ரூ.35 வரை, சவ்சவ்- ரூ.35, பீட்ரூட்- ரூ.35 முதல் ரூ.40 வரை, முட்டைக்கோஸ்- ரூ.15 வரை, மிளகாய்- ரூ.50 வரை, இஞ்சி- ரூ.70 வரை, சேனைக்கிழங்கு- ரூ.45, சேப்பங்கிழங்கு- ரூ.45, கத்திரிக்காய்- ரூ.35 முதல் ரூ.60 வரை,

வெண்டைக்காய்- ரூ.45, அவரைக்காய்- ரூ.40, கோவைக்காய்- ரூ.30, கொத்தவரங்காய்- ரூ.30, பாகற்காய்(பன்னீர்)- ரூ.55, பெரிய பாகற்காய்- ரூ.40 வரை, முருங்கைக்காய்- ரூ.50 முதல் ரூ.60 வரை, முள்ளங்கி- ரூ.15 முதல் ரூ.20 வரை, வெள்ளரிக்காய்- ரூ.25, புடலங்காய்- ரூ.25 முதல் ரூ.30 வரை, தக்காளி- ரூ.70 முதல் ரூ.80 வரை, காலிபிளவர்(ஒன்று)- ரூ.25 முதல் ரூ.40 வரை, பீர்க்கங்காய்- ரூ.35 முதல் ரூ.40 வரை, சுரைக்காய்- ரூ.15, சாம்பார் வெங்காயம்- ரூ.80 முதல் ரூ.90 வரை, தேங்காய்- ரூ.25 வரை, வாழைக்காய்- ரூ.8 வரை இவ்வாறு அவர் கூறினார்.

பழங்களின் விலை நிலவரம் குறித்து கோயம்பேடு மார்க்கெட் அங்காடி நிர்வாகக்குழு உறுப்பினர் பழக்கடை கே.ஜெயராமன் கூறியதாவது:- விளைச்சல்-வரத்து பாதிக்காத நிலையில் பழங்களின் விலையில் பெரிய அளவில் மாற்றம் இல்லை. மேலும் ஆடி மாதத்தில் முகூர்த்த நாட்கள் மற்றும் விசேஷ நாட்கள் இல்லாததால், பழங்களின் விலையில் பெரிய அளவில் மாற்றம் இல்லை. எனவே பெரும்பாலான பழங்கள் கடந்த வார விலையில் தொடருகின்றன.

இன்னும் 10 நாட்களில் சிம்லா ஆப்பிள் வருகை இருக்கும். தரமான ஆப்பிள்கள் அதிகளவில் இறக்குமதி செய்யப்படும். அதேபோல எகிப்து ஆரஞ்சு வருகையும் அதிகரிக்கும். மாம்பழ சீசன் இம்மாதத்துடன் முடிவுக்கு வர உள்ளது. ஆயுத பூஜை காலகட்டத்தில் பழங்களின் விலை குறைய அதிக வாய்ப்பு இருக்கிறது.

பழங்களின் விலை நிலவரம் (கிலோவில்) வருமாறு:- வாஷிங்டன் ஆப்பிள்- ரூ.200, சீனா ஆப்பிள்- ரூ.180, சிம்லா ஆப்பிள் (இந்தியா) - வரத்து இல்லை. மாதுளை- ரூ80 முதல் ரூ.100 வரை, சாத்துக்குடி- ரூ.30 முதல் ரூ.35 வரை, ஆரஞ்சு- ரூ.80 முதல் ரூ.100 வரை, சப்போட்டா- ரூ.40, அன்னாசிபழம் (ஒன்று)- ரூ.80 முதல் ரூ.90 வரை, கொய்யா- ரூ.40, வாழை (தார்)- ரூ.400 முதல் ரூ.500 வரை, தர்பீஸ்- ரூ.15 வரை, திராட்சை- ரூ.60, கிர்ணி பழம்- ரூ.20.

இவ்வாறு அவர் கூறினார்.

**கூடலூர் பகுதியில் பலத்த மழை: பசுமையாகும் வனப்பகுதி; பயணிகளை கவரும் நீர்வீழ்ச்சி**



கூடலூர் பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக வனப்பகுதிகள் பசுமையாக காட்சி அளிக்கிறது. சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் பல இடங்களில் நீர்வீழ்ச்சிகள் உருவாகி உள்ளன.

கூடலூர் பகுதியில் கடந்த ஆண்டு பருவமழை பெய்ய வில்லை. இதனால் வறட்சி நிலவியது. இதன் காரணமாக வனப்பகுதியில் இருந்த மரம், செடிகள் காய்ந்து காணப்பட்டது. நீர்நிலைகள் வறண்டன. தேயிலை தோட்டங்களில் தேயிலை கொழுந்து உற்பத்தி அடியோடு குறைந்தது. மேலும் பணப்பயிரான குறுமிளகு, ஏலக்காய் விளைச்சல் குறைந்தது. இதனால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மிகவும் சிரமத்துக்கு ஆளாகினர்.

இந்த நிலையில் கூடலூர் பகுதியில் கடந்த வாரம் தென்மேற்கு பருவமழை தீவிரமாக பெய்தது. இதனால் அனைத்து ஆறுகளிலும் மழைவெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. தொடர்ந்து மழை பெய்வதால் வறட்சி நீங்கி

வனப்பகுதிகள் பச்சை பசேல் என பசுமை போர்த்தியது போல் காட்சி அளிக்கிறது.

மேலும் கூடலூர்– ஊட்டி தேசிய நெடுஞ்சாலை மற்றும் கோழிக்கோடு செல்லும் சாலையோரங்களில் பல இடங்களில் புதிய நீர்வீழ்ச்சிகள் உருவாகி உள்ளன. அவை சுற்றுலா பயணிகள் கவரும் வகையில் உள்ளது. இது போல் கூடலூர், தேவாலா, நாடுகாணி, ஓவேலி உள்ளிட்ட இடங்களில் நிலத்தில் நீரூற்றுகள் உருவாகி வருகிறது.

இது குறித்து பொதுமக்கள், விவசாயிகள் கூறியதாவது:–

பருவமழை பெய்து வருவதால் வனப்பகுதியில் மரம், செடிகள் செழித்து வளர்ந்து பசுமையாக காட்சி அளிக்கிறது. புதிய நீர்வீழ்ச்சிகள் ஆங்காங்கே தோன்றி உள்ளது சுற்றுலா பயணிகள் மற்றும் உள்ளூர்வாசிகளை கவரும் வகையில் உள்ளது. இது போன்ற இதமான சூழல் காரணமாக நீலகிரி மாவட்டத்துக்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. மழை காரணமாக நிலத்தடி நீர்மட்டம் உயரும். விவசாய பணிகளும் தடையின்றி நடைபெறும். மேலும் நடப்பு ஆண்டில் குறுமிளகு, ஏலக்காய், இஞ்சி, காபி விளைச்சல் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினகரன்

**கல்லீரலை பலப்படுத்தும் கத்தரிக்காய்**



நமக்கு எளிதில், அருகில் கிடைக்கும் மூலிகைகள், இல்லத்தில் அஞ்சறைப்பெட்டியில் உள்ள உணவுப்பொருட்களை கொண்டு பாதுகாப்பான பக்கவிளைவில்லாத பயனுள்ள மருத்துவத்தை பார்த்து வருகிறோம். அந்தவகையில், செரிமானத்தை தூண்ட கூடியதும், கல்லீரலை பலப்படுத்தும் தன்மை கொண்டதும், வலி நிவாரணியாக விளங்குவதுமான கத்திரிக்காயின் நன்மைகள் குறித்து நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் காணலாம்.

கத்திரிக்காய் சிறந்த உணவாகி ஊட்டசத்துக்களை கொடுக்கிறது. இதில், பொட்டாசியம், மெக்னீசியம், இரும்பு, கால்சியம் சத்துக்கள் மிகுதியாக உள்ளன. புற்றுநோய் வராமல் தடுக்கும் அற்புதமான மருந்தாகிறது. கத்திரிக்காயில் நார்ச்சத்து மிகுதியாக இருப்பதால் மலச்சிக்கலை போக்குகிறது. ரத்தத்தில் உள்ள கொழுப்பை கரைக்கிறது. தோலுக்கு பலம் தருவதுடன், தலைமுடிக்கு வளம் கொடுக்கிறது. உடல் வலியை போக்குகிறது. ஈரலை பலப்படுத்துவதாக விளங்குகிறது.

கத்திரிக்காயை பயன்படுத்தி கல்லீரலை பலப்படுத்தும், பசியை தூண்டும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கத்தரிக்காய், நல்லெண்ணெய், மிளகு, சீரகம்.செய்முறை: ஒரு பாத்திரத்தில் நல்லெண்ணெய் விடவும். இதில், ஒரு ஸ்பூன் கத்திரி பிஞ்சு பசை சேர்த்து வதக்கவும். ஒரு டம்ளர் நீர்விட்டு உப்பு, மிளகுப்பொடி, சீரகப்பொடி சேர்த்து கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்துவர பசியின்மை, சுவையின்மை சரியாகும். ஜீரணத்தை தூண்டும். கல்லீரலை பலப்படுத்தும். கத்தரிக்காய் 2ம் நிலை சர்க்கரை நோய்க்கு அற்புதமான மருந்தாகிறது. ரத்தத்தை கட்டுக்குள் வைத்திருக்கும் தன்மை உடையது.

கத்திரி இலைகளை பயன்படுத்தி ஆஸ்துமா, மூச்சுத்திணறலுக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கத்திரி இலைகள், அதிமதுரம், தேன். செய்முறை: ஒரு பாத்திரத்தில், அதிமதுர துண்டுகளை லேசாக நசுக்கி

போடவும். இதனுடன், 2 கத்தரி இலைகள் சேர்த்து நீர்விட்டு கொதிக்க வைக்கவும். வடிகட்டி தேன் சேர்த்து காலை, மாலை வேளைகளில் குடித்துவர சளி, இருமல், ஆஸ்துமா, மூச்சுத்திணறல் பிரச்னைகள் சரியாகும்.

நெஞ்சக கோளாறுகள் குணமாகும். சிறுநீர் பெருக்கியாக விளங்குகிறது. கொழுப்பை குறைக்கும். ரத்த அழுத்தத்தை குறைக்கும். கத்திரி இலைகள் துளசியை போன்ற மருத்துவ குணங்களை கொண்டுள்ளது. கத்திரி வேரை பயன்படுத்தி மூட்டுவலி, காய்ச்சலுக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கத்திரி வேர், மஞ்சள், சீரகம், தேன்.செய்முறை: கத்திரி வேரை சுத்தப்படுத்தி எடுக்கவும். இதனுடன் கால் ஸ்பூன் மஞ்சள், சிறிது சீரகம் சேர்த்து ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைத்து வடிகட்டி, தேன் சேர்த்து குடித்துவர மூட்டுவலி, காய்ச்சல், இடுப்பு வலி குணமாகும். வலி நிவாரணியாக விளங்குகிறது.

கல்லீரல் வீக்கத்தை குணப்படுத்தும் மருத்துவம் குறித்து பார்க்கலாம். இப்பிரச்னைக்கு இஞ்சி, தேன், பூண்டு, பால், மஞ்சள் ஆகியவை மருந்தாகிறது. இஞ்சி சாறுடன் சிறிது தேன் சேர்த்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் கல்லீரல் வீக்கம் குணமாகும். மாலை வேளையில், 5 பல் பூண்டு எடுத்து சிறிது மஞ்சள் சேர்த்து பாலில் கொதிக்க வைத்து குடித்துவர கல்லீரல் வீக்கம் குணமாகும்.